இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN


Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 10 திகதி: 04.06.2017 விலை : 20.00

# எமது நாட்டில் ஒற்றுமை, சமாதானத்தை ஏற்படுத்த திருமறைக் கலாமன்றம் உழைக்கின்றது

## சிற்ப பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் யாழ். ஆயர்



திருமறைக்கலா மன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியானது கலாமுற்றம் ஓவியக் கலையகத்தின் மூலமாக நடத்திய 'களிமண் சிற்பக்கற்கை' நெறியில் பயின்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 28.05.2017 அன்று யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் கலந்து சிறப்பித்தனர்

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஓவியக் கலையகத்தினை அமைத்த திருமறைக் கலாமன்றம், அக் கலையகத்தின் மூலமாக முதன் முதலாக களிமண் சிற்பப் பயிற்சி நெறியையும் ஒரு வருட சான்றிதழ் கற்கைநெறியாக நடத்தியது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்கள் இப்பணியினைப் பாராட்டியதுடன் திருமறைக் கலா மன்றத்தின் தாபகரும் இயக்குநருமாகிய நீ.மரியசேவியர் அடிகளைக் கற்கின்ற காலத்தில் இருந்தே தான் நன்கு அறிந்ததாகவும் அவர் எப்போதும் புதிதாக சிந்திப்பதிலும் அதனை செயற்படுத்துவதிலும் வல்லவராக இருந்தார்.

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

## மாணவர்களின் தனித்திறமைகளை இனங்கண்டு வளர்க்க வேண்டியது இன்றைய ஆசிரியர்களின் கடமை

### ஆயர் தின விழாவில் யாழ். ஆயர்



யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தமது பெயர்கொண்ட புனிதர் ஜஸ்ரின் அவர்களின் விழாவை கத்தோலிக்க அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து 01.06. 2017 அன்று காலை 09.00 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆயர் தின விழாவாக கொண்டாடினர்.

இவ்விழாத் திருப்பலியில் மறையுரையாற்றிய ஆயர் அவர்கள் ஒவ்வொரு மாணவர்களின் தனித்திறமைகளை இனங்கண்டு. அவர்களை முழு ஆளுமை வளர்ச்சியோடு -

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

## தெளிவான உறுதியான கருத்துக்களைத் துணிச்சலோடு வெளிப்படுத்துபவர் எமது ஆயர்

### ஆயர் தின விழாவில் குரு முதல்வர் உரை

யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆயர் தின விழாவில் கலந்துகொண்ட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் யாழ். மறைமாவட்டஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் சார்பாக வாழ்த்தி உரையாற்றிய குரு முதல்வர் அருட்திரு. ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது ஆயர் யாழ். மறை

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை ஆயர் பேரவையின் அறிக்கை

எமது நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்துவரும் பலத்த மழையின் காரணமாக வெள்ளத்தாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட எம் அன்புச் சகோதர, சகோதரிகளுக்கும், பிள்ளைகளுக்கும் எமது துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன் விளைவாக பல குடும்பங்களில் தங்கள் அன்பு உறவுகளை இழந்தவர்களுக்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களுடைய ஆன்மாசாந்தியடையவும்நாம் பிரார்த்திக்கின்றோம்.

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

## செல்வன் ஜீவிதனின் மிருதங்க அரங்கேற்றம்



மானிப்பாய் புனித அன்னாள் ஆலயப்பங்கு மகனும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனும் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும் வசீகரன் கிருபா மேரி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன் வ.ஜீவிதன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் அருட்பணி. செ. அன்புராசா (அ.ம.தி) அடிகள் தலைமையில் 27.05.2017 அன்று மானிப்பாய் பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி.யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு ஆசி வழங்கினார்.

நல்லை ஆதீனக் குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசி வழங்கியிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி -

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## வேலையில்லாப் பிரச்சினையும் மாகாணசபையும்

வடக்குக் கிழக்கில் உள்ள வேலையில்லாப் பிரச்சினை என்பது அரசியல் உரிமையோடு சம்பந்தப்பட்டது. ஏனைய மாகாணங்களை விட இங்கு வேலையில்லாப் பிரச்சினை அதிகமாகவுள்ளமை என்பது அரசியல் சார்ந்த பிரச்சனை என்பதை மறுக்க முடியாது.

மேற்கத்தைய நாடுகளில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை சிறிய நிதி உதவி ஒன்றை அரசாங்கம் வழங்கும் அங்கு அரச உத்தியோகம் என்பதை விடத் தனியார் நிறுவனங்களில் தான் வேலைகள் அதிகம்.

ஆனால் அவ்வாறான திட்டங்கள் எதுவும் இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் இல்லை குறிப்பாக பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர் யுவதிகள் அரசாங்க வேலை அல்லது தனியார் துறைகளில் வேலை கிடைக்கும் வரை பெற்றோருடன் தங்கிவாழும் நிலைமை தான் உள்ளது. படித்துப் பட்டம் பெறும் எந்தவொரு இளைஞனுக்கும் யுவதிக்கும் உடனடியாக வேலை கிடைக்காது.

குறைந்தது ஐந்து வருடங்கள் வரைகாத்திருக்க வேண்டிய நிலைமை. பலரக்கு பத்து வருடங்கள் சென்றும் வேலை கிடைக்கவில்லை. அரச நிறுவனங்களைவிட தனியார் துறையில் வேலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளைக் கூட அரசாங்கம் தனது கொள்கையாக ஏற்று செயற்படுத்தவும் இல்லை. அதேவேளை தனியார் துறையை ஊக்குவித்தால் அது அரசியல் பிரச்சினையாக மாறி அரசாங்கத்தைப் பதவி கவிழ்க்கும் நிலைமைக்கும் சென்று விடும். அதனால் அரசாங்கம் அந்த விடயத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது.

ஜே.ஆர் .ஜெயவாத்தன 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பை உருவாக்கி ,திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினார். அன்றில் இருந்து தனியார் துறை நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டன. ஆனாலும் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெறும் இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளை சட்டத்தின் மூலமாக அந்த அரசாங்கம் செய்யவில்லை அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று கலைத்துறையில் பட்டம் பெற்ற மாணவர்களை எவ்வாறு தனியார் துறையில் இணைப்பது என்ற பிரச்சினை, இரண்டாவது தனியார் துறையில் வேலையில் இணைந்து கொள்வோருக்கான சம்பள விவகாரம்.

ஆக இந்த இரு காரணங்களின் அடிப்படையில் அரசாங்கம் தனியார் துறைவிடயத்தில் தலையிடவில்லை என்று கூறலாம். அதேவேளை விஞ்ஞான மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிகளைக்கூட தனியார் துறை யில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் செய்யவில்லை. தனியார் துறையில் குறிப்பாகதனியார் வங்கிகள். முதலீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் விஞ்ஞானப் பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்துவதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அதாவது நடைமுறைக்கு ஏற்ற தரத்தில் பல்கலைக்கழகக் கல்வி இல்லை என்பது ஒரு காரணம் மற்றையது. க.பொ.த உயர் தரத்தில் சாதாரண சித்தியடைந்தவர்களைபோட்டிப்பரீட்சையின்மூலம்வேலைக்கு அமர்த்தினால் இலகுவானது என தனியார்துறை கருதுகின்றது.

தனியார்துறை அவ்வாறு கருதுவதற்கு என்ன காரணம்? இலங்கையில் அறிசார் கல்வி முறைதான் உள்ளது. தொழில் முறை சார்ந்த கல்வி பல்கலைக் கழகங்களில் இல்லை. ஆகவேதங்கள் நிறுவனங்களில் வருமானத்தை ஈட்டக்கூடிய முறையில்தான் வேலைக்கு ஆட்களை அமர்த்துகின்றனர். ஆகவே இந்த சிக்கல் நிலைமைக்குக் கூட அரசாங்கம் தான் தீர்வுகாணவேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறான சட்ட ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. வெறுமனே தனியார் துறைக்கான அனுமதிமாத்திரம் வழங்கப்படுகின்றன.

அதேவேளை அரச நிறுவனங்கள், திணைக்களங்களில் வேலைக்கு ஆட்களை அமர்த்துவதில் இன விகிதாசார முறையிலான கோட்டாமுறை ஒன்று உள்ளது. ஆனால் 1983 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பிக்கக்பட்ட பின்னர் அந்தக் கோட்டா முறை பின்பற்றப்படுவதில்லை. உதாரணமாக அரச திணைக்களம் ஒன்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப 60 பேர் தேவைஎன்றால் 40பேர் சிங்களவர்களாகவும் ஆகக் குறைந்தது 20 பேர் தமிழ் முஸ்லிம்களாகவும் இருந்தாக வேண்டும். ஆனால் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்படவில்லை. அரசியல் செல்வாக்கு அல்லது தமிழ்மொழி பேசுவோரைத்தான் இந்த வெற்றிடத்திற்கு எடுக்கவேண்டும் என்றகட்டாயம் இருந்தால் மாத்திரமே அந்தவெற்றிடம் நிரப்பப்படுகின்றது. ஆகவே இந்தவிடயங்கள் குறித்துபேசவேண்டியது. தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள் மாத்திரமே மாகாணசபைகளிடம் அதிகாரமே இல்லை.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# இளம் அருள்பணியாளர்கள் குறித்து திருத்தந்தையின் உரை

இளம் அருள்பணியாளர்கள் உள்ளங்களில், ஆரம்ப ஆர்வமும், தொடர்ந்து அவர்கள் தங்கள் பணியில் சந்திக்கும் களைப்பும் ஒருசேர இடம்பெறுகின்றன என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்திருந்த திருப்பீடத் துறையின் பிரதிநிதிகளிடம் கூறினார்.

அருள்பணியாளர்கள் பேராயத்தின் ஆண்டு நிறையமர்வு கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள், திருத்தந்தையை வத்திக்கானில் சந்தித்தபோது, அருள் பணியாளர்களை உருவாக்கும் பணியில் உள்ள பல்வேறு சவால்களைக் குறித்து, திருத்தந்தை, தன் கருத்துக்களை, அவர்களோடு பகிர்ந்துகொண்டார்.

தன் பணிகளிலிருந்து வரும் சவால்கள், மக்களிடமிருந்துவரும்எதிர்பார்ப்புக்கள், பொறுப்பிலிருந்து எழும் பாரம் என்ற பலகடினமான உண்மைகளை இளம் அருள்பணியாளர்கள் சந்திக்கவேண்டியுள்ளது என்று, திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார். நுகர்வுக் கலாசாரத்தையும், சுயநலத்தையும் உயர்த்திப் பிடிக்கும் இவ்வுலகச் சூழலில் வாழும் இளம் அருள்பணியாளர்கள், நோக்க மற்றவர்களாக, சக்தியிழந்தவர்களாகத் தெரியக்கூடும் எனினும், அவர்களுக்குள் இருக்கும் உறுதியை வெளிக்கொணர்வது முக்கியம் என்று கூறினார்

திருத்தந்தை, இறைவனுக்குச் செவிமடுக்க மக்கள் மறுத்ததால் 'ஆண்டவரின் வார்த்தை அரிதாக இருந்த' (1 சாமுவேல் 3: 1) அக்காலத்தில், சிறுவன் சாமுவேலை இறைவன் அழைத்தார் (1 சாமுவேல் 3: 1-10) என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளவயது தாவீதையும், (1 சாமுவேல் 16: 1-13) தான் வயதில் குறைந்தவன் என்று கூறிய எரேமியாவையும் அழைத்தார் என்று குறிப்பிட்டார்.

இளைய அருட்பணியாளர்களை தான் சந்திக்கும் போதெல்லாம் திருஅவை இளமை குறையாமல் இருப்பதைத் தன்னால் உணர முடிகிறது என்று கூறிய திருத்தந்தை களைப்பின்றி செபித்தல் உள்ளத்திலிருந்து வெளிப்படுவதைப் பிறருடன் பகிர்தல் ஆகியபண்புகளை இளைய அருள்பணியாளர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அருள் பணியாளர்கள் தங்கள் பயணத்தில் களைப்பை உணரும்போது அவர்களுடன் அன்னை மரியாவும் வழிநடக்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்தால் களைப்பு நீங்கி புத்துணர்வுபெற முடியும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருள்பணியாளர்கள் பேராயப் பிரதிநிதிகளுக்கு வழங்கியதன் உரையின் இறுதியில் கூறினார்.

# நற்செய்தியை நோக்கி மனம் திரும்ப அழைக்கும் திருத்தந்தை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் தலைமைப் பணியின் வழியே, புதிய கொள்கைகளைச் சொல்லித் தருகிறார் என்பதைக் காட்டிலும், நற்செய்தியை நோக்கி நாம் மனம் திரும்ப அழைக்கிறார் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும் என்று, இத்தாலிய கர்தி னால் ஒருவர் கூறினார்.

பிளாரன்ஸ் உயர் மறைமாவட்டத்தின் பேராயரான, கர்தினால் ஜியூசெப்பேபெத்தோரி (Giuseppe Betori) அவர்கள், அருட்பணியாளர்கள் பேராயத்தின் நிறையமர்வுக் கூட்டத்தில், வழங்கிய உரையில் இவ்வாறு கூறினார்.

மே 30, முதல், ஜூன் 1, முடிய உரோம் நகரில் நடைபெற்ற அருள் பணியாளர்கள் பேராயத்தின் நிறையமர்வுக் கூட்டத்தில், கர்தினால் பெத்தோரி அவர்கள், "திருத்தந்தை பிரான்சிஸ் எண்ணப்படி, ஒப்புரவு செய்யும் மேய்ப்பர்" என்ற தலைப்பில்உரைவழங்கினார்.

திருத்தந்தை வழங்கி வரும் தினசரி மறையுரைகள், அவர் வெளியிட்டு வரும் அறிக்கைகள், திருமடல்கள், அவர் மேற்கொள்ளும் பணிகள் அனைத்திலும், மனமாற்றமும், ஒப்புரவும், மையக் கருத்துக்களாக விளங்குகின்றன என்று கர்தினால் பெத்தோரி அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

இரக்கத்தின் வெளி அடையாளமாக விளங்கும் ஒப்புரவு, மூவொரு இறைவனின் வெளிப்பாடாக அமையும் ஒப்புரவு என்ற தலைப்புக்களில் கர்தினால்பெத்தோரிஅவர்கள் தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

# எங்கும் பணியாற்ற எப்போதும் தயாராக இருத்தல்

தான் பணியாற்றும் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல எப்போதும் தயாராக இருப்பவராக ஒரு அருள்பணியாளர் இருக்க வேண்டும் ஏனெனில் வரலாற்றின் மையம் அவரல்ல என்றும் அவர் சுதந்திரமானவர் என்பதைஅவர் அறிவார் என்றும் கூறினார் திருத்தந்தைபிரான்சிஸ்.

தான் தங்கியிருக்கும் சாந்தாமார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எந்தத் தீமைகளோடும் உடன்பாடு கொள்ளாமல் இறைவன் அனுப்பும் இடத்திற்குப் பணியாற்றச் செல்ல தான் எப்போதும் தயாராக இருக்கவேண்டும் என்றும் தன் மந்தையிடமிருந்து தனக்கான எவ்வித எதிர்பார்ப்புமின்றி வாழும் சுதந்திரமனிதராகிய மேய்ப்பருக்குத் தெரியும் என உரைத்தார்.

திருப்பலியின் முதல் வாசகமாகிய திருத்தூதர் பணிகள் நூலில் புனிதபவுல் தூய ஆவியாரின் கட்டளைக்கிணங்க தான் எருசலேமுக்குச் செல்வதாகக் கூறியதைத் தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை ஒவ்வொரு மேய்ப்பரின் பணியும் எப்போதும் முழுமையடைந்ததாக இருக்கவேண்டும் பாதியில் விட்டுச் செல்வதாக அல்ல என்றார்.

மந்தையுடன் ஒருமேய்ப்பர் கொள்ளும் பிணைப்பு இயேசுவின் சிலுவையால் சுத்திகரிக்கப்பட்டதாக இருக்கும்போது அதனைவிட்டு விட்டுமற்றொரு இடத்திற்குப் பணியாற்றச் செல்வது இலகுவானதாக இருக்கும் என்றார் திருத்தந்தைபிரான்சிஸ். எந்த ஒரு மேய்ப்பரும் தீயவைகளோடு உடன்பாடு கொள்ளாதவராகவும் அனுப்பப்படும் இடங்களுக்கு எவ்வித கேள்வியும் இன்றி கீழ்ப்படிதலுடன் செல்பவராகவும் தன் வாழ்வுக்கு முக்கியத்துவம் தராதவராகவும் செயற்படவேண்டும் என மூன்று விதிகளைத் தன் மறையுரையில் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் மேய்ப்பர்களாகிய அருள்பணியாளர்கள் ஆயர்கள், திருத்தந்தை என அனைவருக்காகவும் செபிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# குறைகளை நிறைவாக்குவோம்!

> ஏதாவது ஓர் அதிசயம் நிகழ்ந்தது, உன் துன்பமான வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடும் எனக் காத்திருக்கிறாயா? எந்த அதிசயமும் இதுவரை நிகழவில்லையா? நீயே அதிசயமாக மாறிவிடு

இந்த வார்த்தைக்குச் சொந்தக்காரர் நிக் வுயுஜிஸிக். யார் இந்த நிக்வுயுஜிஸிக்? எதற்காக இந்த வார்த்தையைச் சொன்னார்? என்ற கேள்விகள் நிச்சயம் எழலாம். நிக் வுயுஜிஸிக இன்று உலக அளவில் பேசப்படும் பிரபலமான தன்னம்பிக்கைப் பேச்சாளர். பேச்சாளர் என்றவுடன் ஃபேஸ்புக் புகழ் மார்க் சக்கர்பேர்க், கூகுள் புகழ் சுந்தர் பிச்சை போன்று சாதனைகள் படைத்து பேச்சாளராய் உயர்ந்தவர் அல்ல. மாறாக தன்னுடைய வேதனை நிறைந்த வாழ்க்கையையே சாதனையாக்கிச் சாதித்தவர்.

ஆம்! நிக் வெறும் 0.99 மீட்டர் உயரமே கொண்ட மனிதர். பிறக்கும் போதே 'Tetra-Amelia Syndrome' என்னும் நோயினால் பாதிக்கப்பட்டு இரண்டு கைகளும், கால்களும் இழந்த வர். தன்னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திச் செய்துகொள்ள கூட அடுத்தவரின் உதவியை நாடிய நிக் நாளடைவில் தன்னுடைய





வேலைகளைத் தானே செய்து கொள்ளும் நிலைக்கு வந்தார். தன்னுடைய இந்தக் குறைபாட்டால் அவர் சந்தித்த அவமானங்கள் வேதனைகள், வருத்தங்கள் எல்லாம் அவரை முடக்கிப் போட்டு விடாமல் இன்று உலகில் பல இலட்சம் இளையோருக்கு வளரிளம் பருவத்தினருக்கு உன்னுடைய வாழ்க்கையால் சிறந்த தன்னம்பிக்கை கொடுப்பவராக திகழ்கிறார். தன்னுடைய உடல் குறைபாட்டை ஒருபொருட்டாக எண்ணாமல், அதனால் மனமுடைந்துபோகாமல் இன்று வாழ்ந்து காட்டிச் சாதித்திருக்கிறார் நிக்.

புதிய சிந்தனையோடு, புதிய உத்வேகத்தோடு மாற்றுப் பாதையில் பயணித்து, மாற்றுச் சமுதாயத்தைப் படைக்க நினைக்கும் ஒவ்வோர் இளையோருக்கும் இருக்கும் மிகப்பெரிய தடை. "என்னால் எப்படி இதைச் செய்ய முடியும்?" என்ற அவநம்பிக்கை. நான் இப்படிஇருக்கவேண்டும், அப்படி இருக்க வேண்டும். இதைச் செய்யவேண்டும், அதைச் சாதிக்கவேண்டும் என்று துடிக்கும் இளையோர் ஒரு கட்டத்தில் 'என்னால் முடியாது' என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் தங்களுக்குள் இருக்கும் குறைகளைப் பெரிதாகப் பார்க்கிறார்கள். என்னால் சரியாகப் பேசமுடியாது எனக்கு ஒருங்கிணைக்கத் தெரியாது என்றும், தங்களுக்குள் இது இல்லை, அது இல்லை என்றும் குறைப்பட்டுக் கொண்டு, தாங்கள் எடுக்கும் முயற்சியிலிருந்து பின் வாங்கி விடுகிறார்கள்.

தங்களிடம் இருக்கும் திறமைகளைக் கண்டுபிடிக்காமல், தங்களின் குறைகளை மட்டுமே பூதக் கண்ணாடி கொண்டு பார்த்து இன்று பெரும்பாலான இளையோர் முடங்கிப்போகிறார்கள். சாதிக்கவேண்டும், மாற்றுச் சமுதாயம் படைக்கவேண்டும் என்று எண்ணும் ஒவ்வோர் இளையோரும் தங்களுடைய குறைகளை உற்றுப் பார்ப்பதைத் தவிர்க்கவேண்டும். எல்லோருடைய வாழ்க்கையிலும் இரண்டு விதமான அம்சங்கள் உள்ளன. ஒன்று, பிடித்த அம்சங்கள்: இரண்டு, பிடிக்காத அம்சங்கள் நன்றாகப்பாடுவது, ஆடுவது, நடிப்பது, பேசுவது, எழுதுவது, படிப்பது, ஒருங்கிணைப்பது என்று பல பிடித்த விடயங்கள் இருக்கலாம். அதற்கு எதிர் மாறாக 'எனக்கு நல்லகுரல் வளம் இல்லையே, எனக்கு நல்ல ஞாபகசக்தி இல்லையே, நான் சுறுசுறுப்பாக இருக்கிறேனா. எனக்கு பேசவரவில்லையே, எனக்குக் கைகால் சரியில்லையே..' என்று பல நமக்குப் பிடிக்காத விசயங்களும் இருக்கலாம். இந்த இரண்டு அம்சங்களில் நமக்குப் பிடித்த காரியங்களில் அதிக கவனம் செலுத்திக்கொண்டே சென்றோம் என்றால், பிடிக்காத விடயங்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பவை நாளடைவில் மறைந்து விடுகின்றன.

அதேவேளையில் பிடிக்காத காரியங்களில் அதிகம் கவனம் செலுத்தினோம் என்றால், நமக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள நல்ல விடயங்கள் நம்மைவிட்டுஅகலஆரம்பிக்கின்றன. மேலும்பிடிக்காத காரியங்கள் அதிகமாக நடக்க ஆரம்பிக்கின்றன. நம்மிடம் இருக்கின்ற குறைகள் என்று நாம் எண்ணுகின்ற காரியங்களைக் குறித்து அதிகமாகச் சிந்திக்காமல், நம்மிடம் இருக்கும் நிறைகளை எண்ணிப் பார்ப்போம். கடவுள் நமக்குக் கொடுத்துள்ள கொடைகள் ஏராளம். நமக்குக் கொடுக்கப்படாதவற்றைக் குறித்து நினைத்து வேதனைப்பட நமக்கு நேரமில்லை என்று எண்ணிக்கொள்வோம்.

நம்முடைய மனித வாழ்வின் ஒரே நோக்கம், மகிழ்வாக, ஆனந்தமாக இருப்பது தான். நாம் அன்றாடம் நம்முடைய குறைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அங்கு மகிழ்ச்சி இருக்காது. வருத்தமும், வேதனையும் தான் இருக்கும். ஆனால் நம்மிடமுள்ள நிறைகளைப் பார்க்கும் போது மகிழ்ச்சியும், ஆனந்தமும் குடிகொள்ளும். இவ்வாறு மகிழ்வாக இருக்கும் போது நம்மையும் தாண்டி நாம் செயல்பட ஆரம்பிக்கின்றோம். பல சாதனைகளைச் செய்கின்றோம். எனவே குறைகளைப் பார்ப்பதைவிட்டுவிட்டு, நிறைகளைப் பார்த்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

சென்னையில் 'பைக் டாக்ஸி' சேவையை வழங்கித் தனி அடையாளத்தைப் பெற்றிருக்கும் 'மாஉலா' பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சென்னையில் இயங்கும் 'மாஉலா' இந்தியாவின் மாற்றுத் திறனாளிகளால் இயக்கப்படும் முதல் பைக் டாக்ஸி சேவை. இந்த 'மாஉலா' என்னும் பைக் டாக்ஸி சேவையை உருவாக்கியவர் பாலாஜி என்னும் மாற்றுத்திறனாளி கல்லூரிப் படிப்பை முடித்த பாலாஜி பல்வேறு நிறுவனங்களில் வேலைக்கு விண்ணப்பித்தார். சொப்வெயார் கம்பனியிலும் அவருக்கு வேலை கிடைத்தது. ஆனால் இவருக்காக ஒவ்வொருவரும் பரிதாபப்பட்டு எல்லா விடயங்களிலும் உதவிசெய்வது பிடிக்காமல், அதை அசௌகரியமாக உணர்ந்திருக்கிறார். எனவே தன்னுடைய நண்பர் கடாஃபி கூறிய ஆலோசனைப்படி 'மாஉலா' என்னும் பைக் டாக்ஸி சேவையைத் தொடங்கியிருக்கிறார்.

மாற்றுத்திறனாளிகள் என்ற வார்த்தையில் இருந்து 'மா' என்பதையும், பயணம் என்ற அர்த்தம் தரக்கூடிய 'உலா' என்ற வார்த்தையையும் சேர்த்து 'மாஉலா' என்று தன்னுடைய நிறுவனத்திற்குப் பெயர் வைத்திருக்கிறார். இரு சக்கரவாகனங்களில் இயங்கும் இந்த டாக்ஸி சேவை இன்று சென்னையில்பலருக்கும் முதல் தேர்வாக இருந்து வருகின்றது. முதலில் இரண்டுபேரால் தொடங்கப்பட்ட 'மாஉலா' இன்று 11 பேர்களைக் கொண்டநிறுவனமாக விரிவடைந்துள்ளது.

அந்த மாஉலாவைக் டாக்ஸி பரபரப்பான சென்னையில் பலரது போக்குவரத்துத் தேர்வாக மாறியுள்ளது. ஆட்டோரிக்ஸா, கால் டாக்ஸி நிறுவனங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் அளவுக்கு மாஉலாவின் வளர்ச்சி சென்னை மக்களிடம் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பாலாஜி தன்னுடைய உடல் குறைபாட்டையே நினைத்துக் கொண்டிருந்தால் நிச்சயம் அவரால் இப்பொழுது மகிழ்ச்சியாக இந்த வேலையைச் செய்ய முடியாது. தன்னுடைய உடல்குறையை ஒரு பொருட்டாக எண்ணாமல், தனக்குப்பிடித்த, மகிழ்வைக் கொடுக்கக் கூடியபைக் ஓட்டுவதையேபயன்படுத்தி தன்னை நிலை நிறுத்தியிருக்கிறார்

தன்னுடைய உடல் குறையை வைத்து, பலருடைய பரிதாபத்தால்தான் பிழைக்கவேண்டும் என்று அவர் விரும்பவில்லை. தன்னுடைய நிறைவான பகுதியை மட்டுமே பார்த்து, அதிலே கவனத்தைச் செலுத்தியதால் தான் அவரால் சாதிக்க முடிந்தது.

எல்லா மனிதருக்குள்ளும் நிறை கள், கட்டாயம் இருக்கும். ஆனால் அதில் எதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் நம்முடைய வாழ்க்கைத் தரம் மாறுபடும். மகாபாரத காவியத்தில் கிருஷ்ணர் தருமரிடம் " அஸ்தினா புரத்திலிருந்து கெட்டவன் ஒருவன் தேவை கண்டு பிடித்து அழைத்து வா" என்கிறார். ஊர் முழுவதும் சுற்றித் திரிந்து விட்டு வரும் தருமர் "இந்த நாட்டில் எல்லாரும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஒரு கெட்டவரைக் கூட நான் பார்க்கவில்லை" என்று கூறுகிறார். சற்றுநேரம் கழித்து துரியோதனனை அழைக்கும் கிருஷ்ணர் "இந்த நாட்டில் உள்ள நல்லவன் ஒருவனை அழைத்து வா" என்று சொல்கிறார். தேடி அலைந்து விட்டு வரும் துரியோதனன் "இந்த நாட்டில் ஒரு நல்லவன் கூட இல்லை எல்லாரும் கெட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள்" என்கிறான்.

ஒரே இடத்தில் நன்மைத்தனம் மட்டுமே ஒருவனுக்குத் தெரிகிறது. வேறொருவனுக்கு அவ்விடத்தின் தீமையே முழுவதும் தெரிகிறது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது அவரவர் பார்வையின் அடிப்படையிலே எல்லாம் தெரிகிறது. நல்லதையே பார்த்த தருமருக்கு எல்லாருமே நல்லவர்களாக இருந்தார்கள். தீயவற்றைப் பார்த்த துரியோதனனுக்கு எல்லாரும் தீயவர்களாகவே தெரிந்தார்கள். அதேபோன்று தான் நம்முடைய வாழ்விலும் நம்முடைய பார்வையைப் பொறுத்தே எல்லாம் மாறுபடுகின்றன. குறைகளை மட்டுமே பார்க்கிறவன் வாழ்வில் சாதிப்பதில்லை. நிறைகளை மட்டுமே பார்க்கிறவன் சாதித்துச் சரித்திரம் படைக்கிறான். எனவே, இளையோரே உங்களுடைய குறைகளை நினைத்துக் குன்றிப் போகாதீர்கள். உங்களின் நிறைகளை நினைத்து முன்னேறுங்கள்.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

### வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கும், தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குமிடையே இருந்த எல்லை பிரிப்புப் பிரச்சினை.

**- அருட்பணி S.V.B.மங்களராஜா -**

1847ம் ஆண்டு இலங்கை அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டம் (Ceylon Apostolic Vicariate) தெற்கு அப்போஸ்தலிக்க (Southern Apostolic Vicariate) வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டம் (Northern Apostolic Vicariate) எனும் இரண்டு அப்போஸ்தலிக்க மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டபோதே இந்த பிரிப்பு வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கே சாதகமானதாகவும், ஒரு பக்கச்சார்பானதாகவும் கருதப்பட்டது. இரண்டு அப்போஸ்தலிக்க மாவட்டங்களையும் பிரிக்கும் எல்லைக்கோடு கொழும்பு நகரை அண்மித்து ஆரம்பித்ததெனலாம். கொழும்புக்கு வடக்கே ஏறக்குறைய பதினைந்தே மைல் (24கி.மீற்றர்) தொலைவிலுள்ள நீர்கொழும்பு வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குச் சொந்தமானது.

நீர்கொழும்பிலிருந்து நாலந்தா வரை ஒரு நேர்கோடு வரையப்பட்டு அம்பன் கங்கையென்று அழைக்கப்படும் விருள் ஓயா ஊடாக திருகோணமலையருகே கடற்கரையில் முடிவடைய இதற்கு வடக்கேயுள்ள பிரதேசம் வடக்கு அப் போஸ்தலிக்க நிர்வாக மாவட்டமாக நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறாக நீர்கொழும்பு வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும் மட்டக்களப்பு நகரம் தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. இப்படியான பிரிப்பிற்குத் தென்பகுதியின் அப்போஸ்தலிக்க முதல்வராகிய ஆயர் கேய்த்தானோ அந்தோனியோ தமது அதிருப்தியை ரோமாபுரிக்கு வெளியிட்டார். இது முறையானதல்லவென்றும் வாதிட்டார். நீர்கொழும்பும், தலைவில்லு புனித அன்னாள் ஆலயப்பகுதியும் தமது அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குள் வர வேண்டுமென இவர் வாதிட்டார். ஆயர் பெற்றக்கீனி முதலாக நீர்கொழும்புப் பகுதி தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கு வழங்கப்படுவதில் உள்ள நியாயத்தன்மையை ஏற்றுக்கொண்டார். ஆயினும் மட்டக்களப்பு தமது (வடக்கு) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கு வரவேண்டும் என்று குறிப்பிட்டார். இதற்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இப்பிரிப்பு இருத்தலாகாது என்றும் குறிப்பிட்டார். இதில் குறிப்பிடத்தக்க விடயமொன்று என்னவெனில் இருசாராரும் விரும்பிய கூடுதலாயுள்ள தலைவில்லு புனித அன்னாள் ஆலயப்பகுதியை விட்டுக்கொடுக்க மனமில்லாதிருந்தனர். மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளைக் கணக்கிலெடுத்த உரோமை, விசுவாசப் பரப்புதல் சபை நீர்கொழும்புப் பகுதியை தெற்கு அப்போஸ்தலிக்க பரிபாலகருக்கும், மட்டக்களப்புப் பகுதியை வடக்கு அப்போஸ்தலிக்கப் பகுதிக்கும் வழங்கித் தீர்ப்பளித்தது. ஆயினும் இது விடயமாக ஒரு தீர்க்கமான முடிவை பின்னர் எடுக்கலாம் என்றும் குறிப்பிட்டது.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடு தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கு திருப்தியளிக்கவில்லை அத்துடன் வடக்கு (யாழ்ப்பாணம்) தெற்கில் (கொழும்பில்) தங்கியிருக்காது சுயமாக எல்லைகளில் எதுவித மாற்றங்களுமில்லாது இயங்கக்கூடிய புதிய அப்போஸ்தலிக்க மாவட்டமாக இயங்குவதைத் தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்தினர் விரும்பவில்லை. ஆயர் கேய்தானோ அவர்களும் ஆயர் பிராவி (கொழும்பின் மரபு வழித்துணை ஆயரும் பின்னர் மத்திய மாகாண அப்போஸ்தலிக்க மாவட்ட முதல்வருமாக வந்தவர்)

சிலாபம், புனித அன்னாள் ஆலய வருவாயில் ஒரு பகுதியையாவது தமக்குத் தரும்படி வேண்டினர். ஆயர் கேய்தானோ அந்தோனியோவின் வேண்டுகோளின் பின்னணிக் காரணம் என்னவெனில் தலைவில்லு புனித அன்னாள் ஆலயத்தில் அப்போது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் பீடப்பகுதி ஒரு கோவா ஒரட்டோரியன் சபைக் குருவின் மேற்பார்வையில் தான் கட்டப்பட்டுக்கொண்டிருந்தது.

இதற்கான அத்திவாரம் 1837ம் ஆண்டு இன்னுமொரு ஒரட்டோரியன் சபைக்குருவாகிய பேட்றோ கேய்தானோ (Pedro Caetano) அடிகளால் தான் போடப்பட்டது.

**(தொடரும்....)**

### அமலமரித்தியாகிகள் சபை......

**(26.03.2017) வெளியான கட்டுரையின் தொடர்ச்சி**

ஆயர் பெற்றக்கீனியவர்கள் கொழும்பில் தங்கியிருக்காது தனித்தியங்கும் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தின் சுயமாக இயங்கும் ஆயராக மட்டுமிருப்பார். எனவே ஆயர் பெற்றக்கீனி (தெற்கு) கொழும்பு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்திற்கு ஆயராக வரமுடியாததால் தமது தெற்கில் (கொழும்பில்) அல்லது கண்டியில் நிலை கொள்ளும் திட்டமும் கைகூடாது என்று யேசு சபையினர் கருதியிருக்கலாம். அத்துடன் யாழ்ப்பாணத்தில் (வடக்கு) அமல மரித்தியாகிகளுக்கும் அமல மரித்தியாகிகள் அல்லாதோருக்குமிடையில் இடம் பெற்ற கசப்பான அனுபவங்களையும் ஆளுக்கால் குறைகூறும் செயற்பாடுகளாலும் மோசமடைந்த உறவுகள் மீண்டும் சுமூக நிலைக்குத்திருப்புவது கடினமானது என்றும் எல்லோராலும் உணரப்பட்டது.

ஒருவேளை யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தில் பணியாற்றிவந்த துறவற சபைகளுக்கிடையே அழுத்தங்களையும், உறவு முறிவுகளையும் குறைக்கும் முகமாகத் தான் ஆயர் பெற்றக்கீனியவர்கள் படிப்படியாக அமலமரித்தியாகிகளல்லாத மறைபணியாளரை யாழ்ப்பாணத்திலிருந்து தொலைவில் கொழும்பு (தெற்கு) அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்திற்கருகில் உள்ள கைமல், கல்பிட்டி, சிலாபம் ஆகிய மறைத்தளங்களுக்கு அனுப்பி வைத்தார்.

# வளன் பப்பாவின் கேள்வி பதில்கள்




**கேள்வி: ஞாயிறு திருப்பலியில் சில குருக்களின் மறையுரை சுவாரசியமாக இருப்பதில்லை. நீர் என்ன சொல்கிறீர்?**

சுவாரசியமாக இருப்பதற்கு அவர் ஒன்றும் கச்சேரி வைப்பதில்லையே! மறையுரைப்பவர் தகுந்த ஆயத்தத்துடன் இறைவார்த்தையை சூழலுக்கு அமைவாக, சுருக்கமாக எடுத்துரைக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதைக் கேட்பவர் தகுந்த மனநிலையுடன் (Correct disposition of heart ) இருக்க வேண்டும். நகைச்சுவையை மட்டும் எதிர் பார்த்து இருந்தால் அது இல்லாத போது சுவாரசியம் இல்லை தான் அதற்குத் தான் Cable TV, Dish TV கள் இருக்கின்றனவே !

தவம் - நவாலி

**கேள்வி: வழிகாட்டிகள் எப்படி இருக்க வேண்டும்?**

அவர்கள் JCB இயந்திரம் போல செயற்பட வேண்டும். எப்போதுமே உடைத்து நொருக்கும் பணியை மட்டும் செய்து கொண்டிருக்காமல், சில நேரம் கூட்டிச் சேர்க்க வேண்டும். தேவையற்றவர்களை அள்ளி எடுக்க வேண்டும். சமதளமாக்க வேண்டும். ஓய்வு நிலைக்கு

**கேள்வி: முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடாத்தப் போகிறார்களாமே? நீர் என்ன சொல்கிறீர்?**

அவர்கள் நடாத்தும் வேறொரு சுற்றுப்போட்டியில், முள்ளி வாய்க்கால் நினைவேந்தலைச் செய்து உறவுகள் அழுது புலம்ப இந்த நிர்வாகம் அனுமதிக்குமா? உங்களுக்கொரு நீதி மற்றவருக்கு ஒரு நீதியா?

தவம் - நவாலி

**கேள்வி: அரசாங்கம் மதுபானத்தின் விலையை எவ்வளவு ஏற்றியும், மதுபானக்கடையில் வாங்குவோர் கூட்டம் குறைந்தபாடாக இல்லையே ?**

தாயிடமும், மனைவியிடமும் இவர்கள் தம் உழைப்பிலிருந்து கொடுக்கும் பணம் தான் குறையுமே தவிர, இங்கு வரும் கூட்டம் குறையாது. நம்ம குடி மக்களை அசைக்க முடியாது ( நெல்லுயர குடியுயரும் ..? )

தவம் - நவாலி

**கேள்வி: வீட்டில் கஸ்ரம் துன்பம் என்றவுடன் வாஸ்து சாஸ்து என்ற பெயரில் வீட்டில் யன்னல், கதவு நிலைகளை மாற்றுகிறார்களே என்ன சொல்கிறீர் ?**

மாற்ற வேண்டியது யன்னல் கதவு நிலைகளை அல்ல! அவர்களின் மனநிலைகளை! விடா முயற்சி வெற்றிதரும். நம்பிக்கையுடன் உழையுங்கள். ( ஒரு வேளை காற்றோட்டமில்லா யன்னல் கதவு நிலைகளை அவர்கள் மாற்றியிருப்பார்களோ?)

**கேள்வி: ஆலயங்களில், வழிபாடுகள் நடைபெறும் போது குறிப்பாகத் திருப்பலியின் போது கைத்தொலைபேசியை நிறுத்தி வைக்கும் படி (Off) விளம்பரமாக எழுதி ஆலயத் தூண்களிலும், வளாகத்திலுள்ள மரங்களிலும் ஆணி அறைந்து தொங்க விடலாமே ?**

அப்படியானால் தூண்களும், மரங்களும் இல்லாத ஆலய பங்கு நிர்வாகம் என்ன செய்யும் ? மரங்களில் தொங்க விட வேண்டாம் மக்கள் மனங்களில் தங்கும்படி கைத்தொலைபேசியை நிறுத்தச் சொல்லுங்கள் அது போதும்.




# விழுமியங்கள்

அன்ரனி

அறிவியலும், தொழில்நுட்பமும் பிரமிக்க வைக்கும் அளவுக்கு அதன் சிகரத்தைத் தொட்டுக் கொண்டிருக்கையில், மனித விழுமியங்களும், பெறுமானங்களும் கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. மனித மூளையும், உடலும் வளர்ந்த அளவுக்கு ஆன்மாவும், ஒழுக்கமும் வளரவில்லை.

அறிவு வளர்ச்சி அடைந்த போதும் பண்பாட்டு முதிர்ச்சி ஏற்படவில்லை. ஆய்வுகள் எல்லை மீறிச் சென்று கொண்டிருந்தாலும் மனித குலத்தின் ஒழுக்கம் ஓங்கவில்லை. இதற்கு உதாரணங்கள் தான் தற்கொலை, கொலை, கொள்ளை, சித்திரவதை, மோசடி, மது, சூது, போதைப்பொருட்கள் உற்பத்தி, கடத்தல், ஆயுத உற்பத்தி, விபசாரம், பாலியல் வல்லுறவு, பாலியல் விலகல் நடத்தைகள், வேறு பிறழ்வு நடத்தைகள், குரோதம், விரோதம், வன்மம், வஞ்சகம், பொய், புறம் கூறல், ஏமாற்று, அதிகார ஆசை கொண்ட அரசியல், சிறுவர் துஷ்பிரயோகம், வர்த்தக நோக்கில் புதிய நோய்க்கிருமிகளை உற்பத்தி செய்து பிற நாடுகளில் பரப்பி அதற்கான மருந்துப் பொருட்களையும் விற்பனை செய்தல் போன்றவை.

கல்வியில் முன்னேற்றம் கண்ட நாடுகளென்று விபரிக்கப்படுகின்ற இடங்களிலெல்லாம் மிக மோசமான மனித கலாச்சாரங்கள் உருவெடுத்துத் தாண்டவமாடுவதை நாம் காண்கிறோம்.

கல்வி, பொருளாதாரம், அரசியல், இராணுவம், தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானத் தொழில்நுட்பம் என அனைத்திலும் முன்னேற்றம் கண்ட நாடுகளிலும் கூட ஒழுங்கான குடும்பக் கட்டமைப்பு இல்லை. மோசமான பாலியல் கலாசாரம், நோய்கள், எதிர்பாராத பொருளாதாரப் பின்னடைவு, குரூரமான போர்க் குணம் என மிக மிக மோசமான கலாசாரம் ஆட்கொண்டிருப்பதை நாம் அனுபவிக்கின்றோம்.

இப்புதிய உலக ஒழுங்கை ஒரு நிமிடம் உற்று நோக்கும் ஒருவருக்கு, 'கல்வியின் சிகரம் தொட்ட நாடுகளில் கூட ஏன் இவ்வாறு நடைபெறுகின்றன?' என்ற வினா நிச்சயம் எழாமலிருக்க முடியாது. ஆம், இந்தக் கேள்வி நியாயமானதே! சுற்றி வளைக்காமல் சுருங்கக் கூறின், விழுமியக் கல்வி அல்லது ஒழுக்கக்கல்வி இன்மையே இதற்கான பதிலாகும்.

கல்வியென்பது இன்று ஓர் ஆயுதம். அதனை வைத்திருப்பவரைப் பொறுத்து அதன் பயன்பாடு மாறுபடலாம். யாரிடம் கல்வியின் விழுமியம் அல்லது ஒழுக்கம் காணப்படுகிறதோ அவர் கற்ற கல்வி இவ்வுலகத்திற்குச் சாதகமாக அமையும், இல்லையேல் பாதகமாக அமையும். ஆரம்ப காலங்களில் விழுமியக் கல்வி பற்றி அதிகமாகப் பேசப்பட்டன. தற்போது மேற்கத்தியத்தின் பௌதிகவாதம், லௌகீக வாதம், வர்த்தக வாதம் என்ற சிந்தனைகள் பரவலடைந்து, விழுமியக் கல்வி மங்கிப்போனதன் காரணமாக உலகம் முழுவதும் பாரதூரமான பண்பாட்டு பின்னடைவும், ஒழுக்க வீழ்ச்சியும் தலை தூக்கி உள்ளன.

உண்மையைத் தெரிந்து கொள்ளுதல் எளிது. ஆனால் அதை வாழ்ந்து காட்டுவது மிக மிக அரிது. உண்மையை வாழ்வாக்குதல் என்பது உண்மையை அறிந்து கொள்ளுதல் என்பது அல்ல அன்பு, அமைதி, உண்மை, நீதி, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம் என்பவை மனித வாழ்விற்குத் தேவையான மிக உயர்ந்த விழுமியங்கள். இந்த உண்மையை எல்லாரும் தெரிந்து கொள்கிறோம். ஆனால் அவைகளை வாழ்வாக்குவது ஒரு சிலரே.

பல ஆண்டுகளாக இந்த உண்மைகளைப் பற்றிப் பலரும் பேசியிருக்கிறார்கள். வருகின்ற காலங்களிலும் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் யார் அவற்றை வாழ்வது? உண்மைகளைத் தெரிந்து கொள்கிற நாம் ஏன் அதை வாழ்வாக்கத் தவறிவிடுகிறோம்? அன்பு என்பது மனித வாழ்விற்குத் தேவையானது. மனிதர்களாகிய நாம் ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெரியும். நாம் மற்றவரை அன்பு செய்யும்போது நம்முடைய எண்ணங்களும், சிந்தனைகளும் உயர்வடைந்து நாம் ஓர் உயர்ந்த நிலையை அடைவோம். இவையெல்லாம் தெரிந்த பின்பும் மற்றவரை அன்பு செய்ய நாம் மறந்துவிடுகிறோம்.

அமைதி என்பது இன்றைய மனுக்குலத்திற்குக் கட்டாயமாகத் தேவைப்படுகிறது. குடும்பங்களிலும், சமுதாயத்திலும் ஒருவர் ஒருவருக்கு விட்டுக் கொடுத்து வாழும்போது அமைதி பிறக்கும். அப்போது வாழ்வு உயரும். இதை எல்லாரும் அறிந்திருந்தும் முதலில் சண்டையை உருவாக்குவது நாமாகத்தான் இருப்போம். நீதியான சமுதாயம் அமைய வேண்டும். அப்போதுதான் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லாரும் சமமாக வாழ முடியும் என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் நடைமுறையில் நம்மையே உயர்ந்தவராகக் காட்டிக்கொள்ள அடுத்தவரின் உரிமையைப் பறிக்கிறோம்.

இப்படி உண்மைகளை அறிந்திருந்தும் அதை நடைமுறைப்படுத்தி வாழ்வாக்குவதில்தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொதுவான ஒரு சூழலில் பேசும்போது எல்லாரும் அன்பு, அமைதி, உண்மை, நீதி, சமத்துவம் என்று வாய் கிழியப் பேசுகின்றோம். ஆனால் தனிப்பட்ட வாழ்க்கைச் சூழலில் நாம் இந்த உண்மைகளை வாழ்வாக்கி உயர்வடையத் தவறிவிடுகிறோம்.

மனித வரலாற்றில் இந்த உண் மைகளைத் தெரிந்துகொண்டு அதை வாழ்வாக்கியவர்கள் தான் இன்றளவும் பேசப்பட்டு வருகிறார்கள். அவர்களைத்தான் நாம் நம்முடைய வாழ்விற்கு முன் உதாரணமாகச் சொல்லிக் கொள்கிறோம். அவர்களால் வாழ்வாக்க முடிந்ததை, ஏன் நம்மால் வாழ்வாக்க முடியவில்லை? என்று என்றாவது கேள்வி எழுப்பியதுண்டா? இப்பொழுது உங்களுக் குள்ளேயே கேள்வி எழுப்பிப் பாருங்கள். 'ஏன் என்னால் இந்த உண்மைகளை வாழ்வாக்க முடியவில்லை?' இந்தக் கேள்விக்கு நமக்குக் கிடைக்கும் பதில் நம்முடைய முரண்பட்ட சிந்தனைப் போக்கும், வாழ்வியலும்தான்.

நாம் நினைப்பது ஒன்று, செய் வது ஒன்று. நாம் இப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஆகால் வாழ்க்கைச் சூழலில் நம்முடைய பலவீனம் அதை வாழ விடாமல் செய்துவிடுகிறது.

இந்தத் தொடரின் முதல் பகுதியில் இளையோரை உருவாக்கும் சூழல் என்று இளையோர்களை வளர்த்தெடுக்கும் குடும்ப, சமூகப் பின்னணிகளைப் பற்றி பார்த்தோம். இந்தப் பின்னணிகளில் இருந்து உருவாகும் இளையோர் உருவாக்க வேண்டிய சூழலைப் பற்றி இரண்டாம் பகுதியில் பார்த்தோம். இளையோர் உருவாக்க வேண்டிய சூழலில்தான் இந்த உயர்ந்த விழுமியங்களையும் பற்றி ஆழமாகச் சிந்தித்தோம்.

இந்த உண்மைகளைத் தெரிந்து கொள்வதோடு நின்று போய்விட்டால் இளையோருக்காக எழுதப்பட்ட இந்தத் தொடர் விழலுக்கு இறைத்த நீராகத்தான் போய்விடும். எனவே, இந்த உண்மைகளைத் தெரிந்துகொண்டு அதை வாழ்வாக்குவதில் உற்சாகம் காட்ட வேண்டும். 21 ஆம் நூற்றாண்டின் இளைய சமுதாயம் இதற்கு முன்னால் வாழ்ந்து சென்றவர்களைப் போல் அல்ல என்று எண்பித்துக் காட்ட இன்றைய இளையோர் வாழ வேண்டும்.

வியாபார நோக்கோடு நடத்தப்படும் கல்விக் கூடங்களில் மனித வாழ்விற்குத் தேவையான விழுமியங்களைப் பார்ப்பது அரிது. இன்று மதிப்பெண்கள் பெற்றால் போதும் என்ற நிலை உருவாகிவிட்டது. நல்ல மதிப்பெண்கள் பெற்று, சிறந்த வேலைக்குச் சென்று கைநிறையச் சம்பாதிப்பதுதான் மனித வாழ்வின் ஒரே நோக்கமாக இருக்கிறது. இந்தப் பாழாய் போன நேக்கத்தைக் கொண்டிருக்கும் கல்விக் கூடங்கள் எப்படி வாழ்வியல் மதிப்பீடுகளைக் குழந்தைகளுக்குப் போதிக்கப் போகின்றன? எனவே, இன்றைய இளையோர் நாளைய குழந்தைகளை வாழ்வாக்குங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கும் அதைச் சொல்லிக் கொடுங்கள். இந்த விழுமியங்கள் வாழ்வாகும் போது ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும்.

"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோ 6:39)

## 2ம் அண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 05 . 1940

உதிர்வு 13 . 06 . 2015



அந்தோனிப்பிள்ளை ஜோசப் சௌந்தரநாயகம்

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் இலக்கணமாய்
கனவுகள் ஆயிரம் கொண்டு
இலட்சியங்கள் பல தொகுத்து
நினைவில் திகட்டாத - உம்
எழில் உருவம்
தீரவில்லையே மாமா - நீர்
எம்மை விட்டு ஒருபோதும் பிரிவதில்லை
எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் - மாமாவே
உம் விண்ணுலக வாழ்விற்காக
இறைவனிடம் இரந்து நிற்கின்றோம்.

புனித செபஸ்தியார் வீதி, சிலாபம்.

இவரின் பிரிவால் நினைந்துருகும்
புனிதம், பிள்ளைகள்



ஞானேஸ்வரி

> “இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல் இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்.”
> (மத் 26: 26 – 28)



# நான் தான்.... நானே தான்

ஒரு மூட்டையாகக் கட்டி வைக்கப்பட்டிருந்த டிலாவின் உடலையும், தங்கையின் கொடூர மரணத்தால் பாதிக்கப்பட்டு சித்தம் குலைந்து, நினைவுகள் சிதறி, நடப்பது எதுவுமே தெரியாமல் முகட்டையே வெறித்துக் கொண்டிருந்த அவளின் அண்ணாவையும் பார்த்து கல் மனக்காரரும் கதறி அழுதனர். ஒரு பெரிய குடும்பத்துப் பெண் ஓடுகிற இரயிலில் தலையைக் கொடுத்து உடல் சிதறிச் செத்துப் போனது அனைவருக்கும் சொல்ல முடியாத அதிர்ச்சியையும் துக்கத்தையும் கொடுத்தது.

வேகமாக வந்து கொண்டிருந்த இரயிலின் முன்னே திடீரெனக் கைகளில் செபமாலையை ஏந்தியவாறு வந்து தண்டவாளத்தில் மண்டியிட்டவளைக் காப்பாற்ற முடியவில்லையே என்று அந்தக் கோர மரணத்தைக் கண்டவர்கள் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

டிலா என்கிற அழகான யுவதியின் முகமே கண்களுக்குள் வலம் வந்து கொண்டிருந்தது. கருமை நிறமானாலும் அனைவரையும் வசீகரிக்கும் அழகு. கலகலப்பான சுபாவம். நன்கு படித்த குடும்பம். அப்பா ஆங்கில ஆசிரியர். உடன் பிறந்த அண்ணா கல்லூரிப் பேராசிரியர். இருந்தும் என்ன பிரயோசனம்.

கட்டிக் கொடுத்த இடத்தில் ஒரே மகளுக்கு வாழ்க்கை சரியாக அமையவில்லை. செல்லமாக வளர்ந்த பெண் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் பிறந்த வீட்டுக்கே திரும்பவும் வந்து சேர்ந்தாள்.

சில இடங்களில் திருமணமான பெண்களுக்கு பிறந்த வீடும் அந்நியமாகிப் போய் விடுகிறது. ஒரே மகளின் வாழ்க்கை சீரழிந்து விட்டதே.... பிழைக்கத் தெரியாத பெண்ணாக இருக்கிறாளே என்ற ஆதங்கத்தில். பெற்ற தாயும் மாமியாராகிப் போனதுதான் டிலாவுக்கு ஏற்பட்ட கொடுமை. அம்மாவோடு சேர்ந்து அப்பாவின் அக்காவும் அவளை மிகவே ஆட்டி வைத்தார்கள். இருந்தால் குற்றம்... நின்றால் குற்றம் என் கிற கதையாக வார்த்தைகளால் அவளைப் புரட்டி எடுத்தனர்.

இயல்பிலேயே கடின மனம் படைத்த டிலாவின் அம்மா வார்த்தைகளைக் கடித்து துப்பியதுதான் வேதனை. நல்ல ஆடையை அணிந்து கொண்டு வாசலில் போய் நின்றால் “ஏண்டி...... சீவிச் சிங்காரிச்சுக்கிட்டு எவனை மயக்க வாசலில நிற்கிற...” என்றும், ஒரு பிடிச் சோற்றை அதிகமாக உண்டால் “ கொஞ்சமாக் கொட்டிக்க... உடம்பு திமிரெடுத்தால் எவங்கிட்டயாவது போக வேண்டியிருக்கும்”.....என்றும் வார்த்தைகளால் பெற்ற தாயே கொடுமைப்படுத்திய வேதனைதான் இப்படியொரு கொடூர முடிவு எடுக்கத் தூண்டியிருக்கும்.

பலரும் பல விதமாகப் பேச, அநேக மக்கள் டிலாவின் தந்தை நற்கருணையை உதாசீனப்படுத்தியதுதான் இவ்வளவுக்கும் காரணம் என்று நம்பினர். ஆனால்... இலங்கையிலிருந்து அகதியாகச் சென்று அகதி முகாமில்பல்வேறுகஷ்டங்களோடுபோராடிக் கொண்டிருக்கும் ஜோன் அப்படி நினைக்கவில்லை. நற்கருணை அன்பின் வடிவம். தியாகத்தின் சின்னம்.... உயிருள்ள இறைவனின் பிரசன்னம்... அவர் காலடியில் சரணடைந்தால் அனைத்துக் கஷ்டங்களும் காணாமல் போய் விடும் என்பது அவன் விசுவாசமாக இருந்தது. அது அனுபவித்தால் மட்டுமே புரியும். அவன் மட்டுமல்ல இயேசுவை உண்மையிலேயே நேசிக்கும் மக்கள் நற்கருணை இறைவனின் பேரிரக்கம் பொங்கிப் பாயும் ஊற்றுக்கண் என்பதை மறுக்க மாட்டார்கள்.

கோயில் மூப்பரின் மகனாக இருந்தும் டிலாவின் தந்தை ஆலயத்துக்குள் ஒருநாளும் சென்றதில்லை. திருப்பலியாக இருந்தாலும் அல்லது வேறு செப வழிபாடுகளாக இருந்தாலும் ஆலயத்தின் வாசற்புறமாக வெளி முற்றத்தில் நடுநாயகமாக நின்று கொண்டிருப்பார். நற்கருணை விருந்தில் ஒருநாளும் பங்குபற்றியதே இல்லை. ஒரு தடவை இதைப்பற்றி ஜோன் அவரிடம் கேட்டபோது,“ நாம எல்லோருமே பாவிகள்... புனிதமான இறைவனின் திரு உடலைச் சுவைக்கத் தகுதியற்றவர்கள். பைபிளிலும்அப்படித்தான்சொல்லப்பட்டிருக்கு” என்று கூறி விட்டார். ஜோன் விடவில்லை. “யூதாஸ்பெரியபாவின்னு தெரிஞ்சுதானே ஆண்டவர் தன் கையாலயே அப்பத்தைக் கொடுத்தாரே....

அவருக்குத் தெரியாதா அவன் பாவி என்று” அவரை மடக்கியபோது “அதனாலதானே தூக்கில தொங்கும்படியாச்சு” என்று ஒரே போடாகப் போட்டார்.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது அவர் நற்கருணையை ஒதுக்கியது பெரிய தவறு என்று பட்டது. அவர் மட்டுமல்ல பல பேர் ஆண்டவரின் திரு உடலை ஓரங்கட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். திருப்பலியில் திரு விருந்தின்போது தமக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்பது போல் வெளியே உட்கார்ந்து அரட்டை அடிப்பதும், இப்போதுதான் பிறந்த குழந்தையைக் கண்டதுபோல் குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவதும், நற்கருணை பெற்றுக்கொள்ள வருபவர்களைப் பற்றி விமர்சித்துச் சிரிப்பதும், உயிருள்ள இறைவனின் முன்பு செல்கின்றோம் என்ற பயபக்தி இல்லாமல் பெண்கள் தலையை மூடாது, கவர்ச்சிஆடைகளை அணிந்து கொண்டு வரிசையில் செல்வதும், நடந்து கொண்டுதான் இருக்கிறது. குருக்களும், அருட் சகோதரிகளும் இவற்றை ஏன் கண்டுகொள்வதில்லை என்பதுதான் புரியவில்லை. உயிருள்ள இறைவன் இரத்தமும் சதையுமாக எங்களோடு வாழ்வதை ஆழமாக உணர்ந்தவர்கள் மட்டுமே நற்கருணையை நேசிப்பார்கள். மதிப்பார்கள். இறைவனின் பிரசன்னத்தை உணர்வார்கள்.

வெளியூர் சென்றிருந்த ஜோனால் அடக்கத்துக்கு வர முடியவில்லை. இரண்டு நாள் கழித்து அவன் அவர்கள் வீட்டுக்குச் செல்ல, டிலாவின் தந்தை அவனது கைளைப் பிடித்துக் கொண்டு” ஜான்.. இயேசப்பா கை விட்டிட்டிட்டாரே.....” என்று கதறி அழுதபோது, அவனுக்குள் ஏற்பட்ட ஒரு விதமான உந்துதலில் “ மன்னிக்கணும் ஸார்.... இயேசப்பா உங்களைக் கைவிடல.... நீங்கதான் அவரைக் கைவிட்டிட்டீங்க....” என ஆரம்பிக்க...அவர் ஒன்றும் புரியாதவராக ஜோனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

மெல்லத் தயங்கியவாறு “ நீங்க என் மேல் கோபிச்சாலும் பரவாயில்ல ஸார்... என் மனசில தோணுறதச் சொல்லியே ஆகணும்..... ஒரேயொரு தடவை... நற்கருணை ஆண்டவருக்கு உங்களோட உள்ளத்தில இடம் குடுத்திருந்தீங்கன்னா இயேசப்பா உங்களோடயே எப்பவும் தங்கியிருந்திருப்பார்...... உங்க பிரச்சினைகள் தீர வழி காட்டியிருப்பார்..... தகுதியற்ற நிலையில நற்கருணையை வாங்கக்கூடாதுன்கிறது உண்மைதான்..... ஆனா.... அந்த வார்த்தையையே சாட்டாக வைச்சிக்கிட்டு காலமெல்லாம் பாவியாகவே இருந்து ஆண்டவர் ‘இதை என் நினைவாகச் செய்யுங்களேன்னு’ சொல்லி எங்களுக்கு விட்டுப் போன அவரோட உடலையும் இரத்தத்தையும் ஓரங் கட்டுறது சரிதானா ஸார்..... என் மனசில பட்டதைச் சொன்னேன்... தப்பா இருந்தா மன்னிச்சிக்குங்க சார்...” வார்த்தைகளை உதிர்த்து விட்டு அவன் சென்று விட்டான். சில மாதங்கள் கழித்து, அந்த ஆலயத்தில்... கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்து கொண்டிருக்கும் மகனுடன் நற்கருணைக்காக வரிசையில் நின்று கொண்டிருந்த டிலாவின் தந்தையைக் கண்ட பங்கு மக்கள் அதிர்ச்சியில் திகைத்தாலும்... மகிழ்ச்சியில் நிறைந்தனர்.


## தூய யோசவ்வாஸ் ஆண்டு -2017

இலங்கையின் அப்போஸ்தலர்

**“தூய யோசவ்வாஸின் வாழ்வும் பணியும்”**

## கண்காட்சி

**தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டுப் பருத்தித்துறைப் பங்கில்**
**“தூய யோசவ்வாஸின் வாழ்வும் பணியும்” என்ற கண்காட்சி நடைபெறவுள்ளது.**

**இடம் :** பருத்தித்துறை தூய தோமையார் றோ.க.பெண்கள் பாடசாலை
**காலம் :** 09ம், 10ம், 11ம் திகதிகள் – ஆனி, 2017.
**நேரம் :** 09 வெள்ளிக்கிழமை காலை 09.00 – மாலை 04.00
10 சனிக்கிழமை காலை 09.00 – மாலை 04.00
11 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 – மாலை 04.00

தூய யோசவ்வாஸின் வாழ்க்கை வரலாற்றை அறிய ஓர் அரிய சந்தர்ப்பம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பருத்தித்துறைப் பங்குத்தந்தை, பங்கு மறையாசிரியர்கள்

## 16ம் ஆண்டு பிரிவின் நிறைவில்

மலர்வு 13 - 01 - 1938



உதிர்வு 09 - 06 - 2001

அமரர்

**ஞானப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

*பதினாறாண்டு பறந்திட்டாலும்*
*பதித்த பாசம் மறந்திடுமோ*
*பாரில் எம்மை ஒளிர்வித்த*
*பான்மை சேர் விடிவெள்ளி*
*பரமன் இயேசு பாதத்தில்*
*பன்னீர் மலராய் மலர்வீரே !*

உம் சமூக பணியின் தடங்கள் உந்தன் பெயர் சொல்ல
உம் சத்திய நோக்கும் சளைத்திடா உழைப்பும் உந்தன் பெயர் சொல்ல
பக்தியின் பண்பும் பாசத்தின் வாசமும் உந்தன் பெயர் சொல்ல நீர்
ஜீசஸ் பிள்ளையாகினீரே

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (10.06.2017) சனிக்கிழமை காலை 06.00 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

54,2/1 இராஜசிங்க வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 6

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
மருமகள், மைத்துனர், உறவினர்கள்

Ad 30


## வெள்ளத்தால் பாதிக்கப்பட்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குழுக்களையும் வேண்டிக்கொள்வது யாதெனில், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை மனிதாபிமான முறையில் செய்துகொள்ள மறைமாவட்ட கரித்தாஸ், அரசாங்க சேவை அமைப்புக்கள், சமூகசேவை அமைப்பின் ஊடாக இவர்களுக்கு உதவிபுரியத் தங்கள் ஆதரவை அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இச்சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் தனிமையாய் விடப்பட்டவர்களல்ல, தங்களுக்கும் உறவுகள் உண்டு என்பதை உணரச்செய்ய நீதி சார்ந்த உதவி, ஆடைகள், மனிதாபிமான ஆதரவை, உறவுகளை நிலபுலன்களை இழந்த 'மக்களுக்கு வெளிக்காட்டி அவர்களைத் திடப்படுத்தவும் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்ந்தும் எங்களுடைய செபத்தில் இவர்களுக்காக செபிப்பதோடு, இவர்கள் ஆன்மீக மனவலிமையைப் பெறவும், இடர்பாடான இச்சூழலிலிருந்து விடுபட்டு வாழ ஆசீரும் அருளும் வேண்டுகின்றோம்.

இவ்வறிக்கையினை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மேதகு ஆயர் வின்சன்ட் எஸ்.பர்னாந்து அவர்களும் பிரதம செயலாளர் மேதகு ஆயர் டி.வலன்ஸ்மென்டிஸ் அவர்களும் ஒப்பமிட்டு வெளியிட்டனர்.

## மாணவர்களின் தனித்திறமை ....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்க்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியர்களினதும் பொறுப்பும் கடமையுமாகும் எனக் கூறினார்.

மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்துவதை மட்டும் மையமாகக் கொள்ளாது ஒவ்வொரு மாணவர்களையும் அவர்களின் முழு ஆளுமை வளர்ச்சியுடன் வளர்த்தெடுக்கவேண்டிய கட்டாயப் பொறுப்பு இன்றைய கத்தோலிக்க ஆசிரியர்களின் தலையாய கடமையாகும் எனக் குறிப்பிட்டார்.

யாழ் மறைமாவட்டத்தின் அனைத்துக் கத்தோலிக்க பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து யாழ். ஆயரை ஆயர் இல்லத்திலிருந்து பான்ட் வாத்தியத்துடன் அழைத்துச் சென்று திருப்பலியில் இணைந்து கொண்டனர்.

திருப்பலியின் இறுதியில் குருமுதல்வர் அவர்கள் மறைமாவட்டக் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் சார்பாக ஆயரை வாழ்த்தி உரையாற்றினார். தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு திருமறை தேர்வுகளில் சித்தியடைந்த முதல் மூன்று மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டு ஆயரினால் கௌரவிக்கப்பட்டனர். இவ் ஆயர் தினவிழாவினை மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் தந்தை A.F.பெனட் அடிகளார் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் மற்றும் நடுநிலையப் பணியாளர்களுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்தார்.

## எமது நாட்டில்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் 'எப்படிச் சாத்தியமாகும், இதற்கு எப்படி நிதியைத் தேடுவார் என்றெல்லாம் நான் நினைப்பதுண்டு ஆனால் அவர் நினைத்த காரியங்களைச் சாதித்தார்.

அவருக்குப் பலமும் இருந்தது ஆற்றலும் இருந்தது இறைவனுடைய அருளும் அவருடன் கூட இருந்தது. என்றும் பாராட்டியதுடன் யாழ்ப்பாணத்தில் கலைகளை அவரே வளர்த்தார் என்னும் அவ்வாறாகவே இந்தக் களிமண் சிற்பப் பயிற்சியினை முதன் முதலாக எமது மண்ணில் சாத்தியமாக்கியுள்ளார். என்றும் கூறினார். அவரது கனவாக யாழ் மறைமாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் குடை போன்று அமையப்பெற்று பல்வேறு துறைகளுக்கான பீடங்கள் அதில் இடம்பெற்று அவை வளர்க்கப்பட வேண்டும் என்பதாக இருக்கின்றது. என்றும் அதுபற்றி தம்மோடு முன்பு அடிக்கடி உரையாடுவார் என்றும் நான் அதுபற்றி சிந்தித்தாலும், இப்போது தான் அவரைக்காணும் போது அது பற்றி சிந்திப்பதாகவும் தனது வேலைப் பளு அதிகமாகிவிட்டதால், சிந்திக்க முடியாதுள்ளதாகவும் எனினும் அதனைச் சாத்தியமாக்குவதற்கு சிறப்பு விருந்தினராய் வருகை தந்திருக்கும் யாழ்பாணபல்கலைக் கழகத்தினை இயக்கிய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உதவுவார். என்று நான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் திருமறைக் கலாமன்றம் வளர வேண்டும் என்று வாழ்த்தியதுடன் எமதுநாட்டில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு முன்னின்று உழைக்கும் திருமறைக் கலாமன்றம் தொடர்ந்தும் உழைக்க வேண்டுமென்றும் பலவித பாலங்களையும் அமைத்து தெற்கையும் வடக்கையும் இணைக்கும் பெரிய நிறுவனமாக மாறவேண்டுமென்று தான் ஆசிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் சான்றிதழ் பெறும் மாணவர்களுக்கும் வாழ்த்துக் கூறினார். அடுத்து உரையாற்றிய பிரதம விருந்தினர் ஆ.நடராஜன் அவர்கள் யாழ்ப்பாண மண்ணின் பெருமைகளை எடுத்துக்கூறியதுடன் இம்மண் தனித்துவமானது என்றும் எந்தப் பயிர்களும் செழித்து நன்றாக வளரத்தக்க உயிர்த்துவமானது என்றும் கூறியதுடன் அம்மண்ணிலே உயிர்த்துவமான சிற்பங்கள்படைப்பது மேலும் சிறப்பாக இருக்கும் என்றும் இக் கற்கை நெறியைப் பாராட்டினார்.

அத்துடன் சிறப்புரையாற்றிய பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பணிகளைப் பாராட்டினார் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்புத் துறையினை தாம் ஆரம்பித்தாகவும் அங்கு முதலாக இக்கற்கை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அந்த இடைவெளியை திருமறைக்கலாமன்றம் நிவர்த்தி செய்யுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகத்திற்குநிகராக இதனைசெயற்படுத்தியதிருமறைக்கலாமன்றத்தினையும் மரியசேவியர் அடிகளையும், பேராசிரியர் சரத்சந்திர ஜீவா அவர்களையும் தமது உரையில் வெகுவாகப் பாராட்டினார். .

இக்களிமண் சிற்பப்பயிற்சியை நடத்திய பேராசிரியர் அவர்களும் அவரது உதவி யாளர்களும் இந்நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். பேராசிரியர் அவர்கள் தமது உரையில் ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும் அவர்களின் பொறுப்புக்களையும் எடுத்துரைத்ததுடன். கலைகளைக் கற்கின்றவர்கள் அவற்றைத் தமக்கென வைத்துக் கொள்ளாது மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் கூறியதுடன், கலைகள் மொழி மதம் இனம் என அனைத்தும் கடந்து செயலாற்றுவன என்றும். இப்பயிற்சியின் போது தாம் எந்தவேறு பாட்டினையும் உணரவில்லை. என்றும் சமாதானத்துக்காகவும் நல்லிணக்கத் திற்காகவும் கலைஞர்கள் உழைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகதின் பேரவை உறுப்பினராக திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள் அங்கத்துவம் வகித்தகாலத்தில் அவருடன் இருந்த உறவின் காரணமாகவே அவரது அழைப்பினை ஏற்று இப்பயிற்சி நெறியினை அவர் வழங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் அறிமுக உரையினை திருமறைக் கலாமன்றத்தின் நிர்வாக இயக்குநரும், பத்திரிசியார் கல்லூரியின் அதிபருமாகிய அருட்திரு ஜெறோசெல்வநாயகம் அடிகளும், நன்றியுரையினை கலைத்தூது அழகியல் கல்லூரி உபஅதிபர் அருட்திரு செ.அன்புராசா அவர்களும் நிகழ்த்தினர். நிகழ்வில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த 19 மாணவர்களுக்கான தகமைச் சான்றிதழ்கள் பேராசிரியர் சரத்சந்திர ஜீவா அவர்களினால் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றிகலைத்தூது அழகியற் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடன நிகழ்வும் ஒமேகா வார்த்தைகளற்ற நாடகத்தின் சில காட்சிக் கூறுகளும் இந்நிகழ்வில் மேடையேற்றப்பட்டது.

களிமண் சிற்பக்கலைக் கற்கை நெறியில் கலந்துகொண்டு 19 மாணவர்கள் தேர்ச்சிபெற்றதுடன் அவர்கள் உருவாக்கிய 35க்கு மேற்பட்டகளிமண் சிற்பங்கள் றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின், கலாமுற்றம் ஓவியக் கலையகத்தில் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அவர்களின் கண்காட்சி நிகழ்வும் 27.05.2017 காலை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி ப.சுதாகர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இச்சிற்பக் கலைப் பயிற்சியினை கொழும்பு 'கட்புல ஆற்றுகைக்கலைகள் பல்கலைக்கழகத்தின்' பட்டப்படிப்புகள் பீடாதிபதியும் சிற்பக்கலை நிபுணருமான பேராசிரியர் சரத்சந்திர ஜீவா அவர்களும் அவரது உதவியாளர்க

## தெளிவான உறுதியான .....


(01ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தைப் பொறுப்பெடுத்த கடந்த ஒன்றரை வருடத்தில் எமது மறைமாவட்டம் பல மாற்றங்களோடு கூடிய வளர்ச்சியைக் கண்டுவருகின்றது. யாழ். மறைமாவட்டத் திருச்சபையை இறைவனுக்கு உகந்த திருச்சபையாக உருவாக்கத் தேவையான பல புரட்சிகரமான தீர்மானங்களை எடுத்து அவற்றைபல சவால்கள், எதிர்ப்புக்கள், விமர்சனங்கள் மத்தியில் நிறைவேற்ற ஆயர் எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் உறுதுணையாக இருக்கவேண்டும்.

எந்த ஒரு விடயத்தையும் ஆழமாக ஆராய்ந்து அறிந்து தனது தெளிவான உறுதியான கருத்துக்களை துணிச்சலோடு வெளிப்படுத்துகின்றமை எமது ஆயருக்கு உரித்தான பண்பாகும். திருச்சபை பற்றியதாகவோ, அல்லது அரசியல், சமூக, கல்வி, உயர்கல்வி பற்றியதான எந்த விவகாரமானாலும் அநீதிகளைச் சுட்டிக்காட்டுவதும், நீதியை நிலைநாட்டுவதும் அவரது முன்னுரிமையாகும்.

இதனால் அவர் சில சந்தர்ப்பங்களில் பல எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும் எதிர்கொள்ளவேண்டியவராக இருக்கிறார். எனவே தான் கல்விச் சமூகமாகிய நாம் ஒருவருடத்தில் ஒருமுறை, ஆயரின் பெயர் கொண்ட திருநாளில் அவரோடு சேர்ந்து அவருடைய சவால்கள் நிறைந்த பணிக்காக இறைவனிடம் மன்றாடுகிறோம் தொடர்ந்தும் நாம் எமது ஆயருக்காக செபிக்க வேண்டும். இவ்வாறு குருமுதல்வர் கேட்டுக் கொண்டார்.

## புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தமிழ் விழா



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தமிழ் விழாவானது கல்லூரியில் "தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்" எனும் விருதுவாக்குடன் இயங்கிவிரும் தனிநாயகம் தமிழ் மன்றத்தினால் 18.05.2017 அன்று அக்கல்லூரியின் மண்டபத்தில் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களுக்கு மதியில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கவிதை, நடனம், பாடல், நாடகம் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளினால் மெருகூட்டப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் மற்றும் சிறப்பு விருந்தினராக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் திரு.ஜே.ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இதன் சிறப்பு நிகழ்வாக "யாழ்ப்பாணன்" என்ற இசைநாடகம் ஆரங்கேற்றப்பட்டு பலரது பாராட்டைப் பெற்றது சிறப்பம்சமாகும்.

## கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாத்துப் பரப்புவது இன்றும் அவசியமானதொன்றே

### பத்திரிசியார் கல்லூரியில் யோசவ்வாஸ் ஆண்டு தினத்தில் குருமுதல்வர்



தூய பத்திரிசியார் கல்லூரியில் யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டை முன்னிட்டு 12.05.2017 அன்று நடைபெற்ற ஆண்டு தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய குருமுதல்வர் அருட்திரு: ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், தூய யோசவ்வாஸ் அடிகள் அன்று கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாத்து அது இலங்கையில் முழுமையாகப் பரவக் காரணமானார். அவர் கொணர்ந்த விசுவாச வாழ்வு இன்றும் பல்வேறு உலக காரியங்களினாலே ஆட்டங்கண்டிருப்பதனால், மீள் நற்செய்தி அறிவிப்பானது மீண்டும் எம் மண்ணிற்குத் தேவைப்படுகின்றது.

ஆகவே, புனிதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்றும் நாம் அதே எழுச்சியோடு விசுவாசத்திற்கு சாட்சியம் பகர வேண்டிய தேவை இன்றும் உள்ளது என்றார்.

கல்லூரி அதிபர் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தூய யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் எனும் கருப்பொருளில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நடாத்தப்பட்டபல்வேறு போட்டிகளில் பங்குபற்றி முதன்மைபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.



சுவிஸ்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் உயர்திரு கெயிங் வோல்க்கர் நெடர் கூன் அவர்கள் கடந்த 26.05.2017 அன்று மாலை 04.00 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து சமகால மக்களின் அரசியல் அபிலாசைகள் பற்றிக் கலந்துரையாடினார்கள்.

ஆயர் அவர்கள் மக்கள் மீள்குடியமர்வின் போது சந்திக்கும் இடர்கள் பற்றித் தூதுவருக்குத் தெளிவாக எடுத்துரைத்தார்.

## சாட்டி திருத்தலத்தில் மெழுகுவர்த்திப் பவனி

சாட்டி சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் மாலை 5.00 மணிக்கு சிறப்பு வழிபாடுகளும் தொடர்ந்து 6.00 மணிக்கு மெழுகுவர்த்தி தாங்கிய திருச்செபமாலைப் பவனியும் நடைபெற்று வருவதாக யாத்திரைத்தல பரிபாலகர் அருட்பணி லொஷிங்டன் OMI அடிகள் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

இம் முதல் சனி சிறப்பு வழிபாடுகள் மாலை 4.30 மணி முதல் 7.00 மணி வரை நடைபெற்று வருகின்றமையும், இவ்வழிபாட்டில் யாழ். நகரப் பங்குகளில் இருந்து மக்கள் பங்குபற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## செல்வன் ஜீவிதன்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் அருட்பணி. ம.ஜெறோ செல்வநாயகம் அவர்களும் சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீ.வாமதேவன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். கௌரவ விருந்தினர்களாக இசைத் தென்றல் ம.யேசுதாசன் மற்றும் உயர் திரு.ச.ஹரிகரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

செல்வன் வ.ஜீவிதன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தரம் 8ல் கல்வி கற்கும் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு முதன்மை மாணவத் தலைவன் என்பதும், 12 வயதுச்சிறுவன் என்பதும் இவரது குருவின் 40 ஆவது அரங்கேற்ற மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 2017 ஆம் ஆண்டுக்கான விவிலிய வினாவிடைப் போட்டி

மேற்படி போட்டிக்கான மாதிரி வினாக்கொத்துக்கள் (பிரிவு 1 - 5 வரை) தயாராகி விட்டன. பங்குத்தந்தையர்கள் மறைக்கல்வி நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**போட்டிகள்**

| | |
|---|---|
| பங்குமட்டம் | - ஆடி 08ம் திகதி |
| மறைக்கோட்ட மட்டம் | - புரட்டாதி 09ம் திகதி |
| மறை மாவட்ட மட்டம் | - 2, 3ம் பிரிவு புரட்டாதி 23ம் திகதி |
| | 1, 4, 5ம் பிரிவு ஐப்பசி 21ம் திகதி |

**மறைக்கல்வி இயக்குநர்**

## திருமறைக் கலாமன்றத்தின் 'வாழ்வு தந்த வாஸ்' நாடக அரங்கேற்றம்



புனித யோசவ்வாசின் ஆண்டினை முன்னிட்டுத் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'வாழ்வு தந்த வாஸ்' என்னும் வரலாற்று நாடகம் இம்மாதம் 25, 26 யூன். 2017 திகதிகளில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள திருமறைக்கலாமன்றத்தின் திறந்த வெளி அரங்கில் நடைபெற இருக்கின்றது.

கடந்தமாதம் நிகழ்த்தப்படுவதாக இருந்த இந்நாடகம் திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞரான ம.தைரியநாதன் அவர்களின் மரண நிகழ்வின் காரணத்தினால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பிரமாண்டமான அரங்க அமைப்பு டன் 60 க்கு மேற்பட்ட நடிகர்களுடன் அரங்கேற இருக்கும் இந்நாடகம் 2015 ஆம் ஆண்டு யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களால் எழுதி, நெறிப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டினை யும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதத்தவர் துன்புறுத்தப்பட்டபோது உயிராபத்து நிறைந்த அக்காலத்தில் கோவையில் இருந்து குருவாகியபுனித யோசவ்வாஸ், மாறுவேடத்தில் இலங்கைக்கு வந்து இலங்கைமக்களுக்காகவே பணியாற்றி கத்தோலிக்க சமயத்துக்கு உயிர்கொடுத்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.